**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்</u>**

**முன்னிலை. திருமதி.S.சுஜாதா, எம்.ஏ.,எம்.எல்.,**

**தலைமை தாங்கும் அலுவலர்,**

**தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்.**

2026 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

I.D.No.297/2019

CNR No.TNKP 18-000589-2019

K.திருமலை
தொழிலாளி எண்: GR 188
பெரிய செவலை கிராமம்,
உளுந்தூர்பேட்டை தாலுக்கா,
விழுப்புரம் - 607 209 ... மனுதாரர்/தொழிலாளி

/எதிராக/

நிர்வாகம் ,
கிரீடோ இந்தியா பிரைவேட் லிமிடெட்,
பிளாட் எண்.59/2, 8வது நிழற்சாலை,
1வது குறுக்கு சாலை,
மஹிந்தரா வேர்ல்ட் சிட்டி,
செங்கற்பட்டு தாலுக்கா,
காஞ்சீபுரம் மாவட்டம் - 603 004. ... எதிர்மனுதாரர்/நிர்வாகம்

இந்த தொழிற்தகராறு வழக்கு கடந்த 15.05.2026 அன்று முதல் நிலை விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.J.பிரதாபன், S.ருத்ரநாத் மற்றும் N.பொன்னுரங்கம் ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில்

வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.M.இளங்கோவன், M.தண்டாயுதபாணி மற்றும் R. கார்த்திக் ஆகியோர் ஆஜராகியும் நடத்தப்பட்ட முதல் நிலை விசாரணையில்இ இருதரப்பு வாதங்கள் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**முதல் நிலை விசாரணைக்கான உத்தரவு**

1. மனுதாரரை பணியிலிருந்து நீக்கிய எதிர்மனுதாரரின் 13.04.2018 நாளிட்ட உத்தரவு இயற்கை நீதிக்கும், மாதிரி நிலையாணைகளுக்கும், தொழிற்தகராறு சட்டத்திற்கும் விரோதமானது என்பதால், அந்த உத்தரவை ரத்து செய்து, மனுதாரருக்கு மீண்டும் பணியும், பின்சம்பளமும் இதர பண மற்றும் பணி பயன்களும், பணித்தொடர்ச்சியும், வழங்கிட எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.**மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள கோரிக்கை மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் ஐடிஐ படித்துள்ளார். மனுதாரர் 12.08.2013 அன்று எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் என்கிரேவிங்க் பிரிவில் ஆப்ரேட்டராக பணியில் சேர்க்கப்பட்டு 11.11.2016 தேதியில் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்.

அவருடைய கடைசி மாதச்சம்பளம் ரூ.11,806/-. எதிர்மனுதாரர் தொழிற்சாலை கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் சீனா நாட்டைச்சார்ந்த ஒரு பன்னாட்டு நிறுவனமாகும். டயர் உற்பத்திக்கு தேவையான உயர் Mould & Bladder mould ஆகியவற்றை தயாரிக்கும் தொழிற்சாலையாகும். இந்த தொழிற்சாலை JK Tyre-MRF, CEAT, Birla, Continental, Apollo, Good year, Flat Mould, OAK போன்ற முன்னணி நிறுவனங்களை வாடிக்கையாளராக கொண்டு, நல்ல லாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனத்தில் சுமார் 400க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வந்தாலும் அதில் 130 தொழிலாளர்களை மட்டுமே நிரந்தர தொழிலாளர்களாக்கி, மீதமுள்ளவர்களை பயிற்சியாளர்கள் என்றும், வேலை பழகுநர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் என்ற பெயரில் அமர்த்தப்பட்டு நேரடி உற்பத்தியில் ஈடுபட செய்து, தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலியை வழங்கி கடுமையாக வேலை வாங்குவதோடு கொத்தடிமைகள் போல் நடத்தி வருகிறது. தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை

சட்டப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை. தொழிலாளர்களுக்குள்ள பிரச்சனைகளை நிர்வாகத்துடன் பேசி சுமூக தீர்வு காண ஒரு தொழிற்சங்கத்தை 03.06.2015 தேதியில் உருவாக்கினார்கள். தொழிற்சங்கத்தின் மூலம் பொதுக்கோரிக்கைகளை வலியுறுத்தி 08.06.2015 தேதியில் தொழிலாளர் உதவி ஆணையர் அவர்கள் முன்பாக தொழிற்தகராறு எழுப்பினார்கள். மனுதாரர் தொழிற்சங்கத்தின் முன்னணி ஊழியர் ஆவார். இதை பொறுத்துக்கொள்ளாத நிர்வாகம் தொழிற்சங்கத்தின் முன்னணி நிர்வாகிகளை பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு தொழிலாளர்களை சங்கத்தைவிட்டு நீங்க வேண்டுமென்று மிரட்டியது. எனவே தொழிற்சங்கத்தின் சார்பிலும், தொழிலாளர்கள் சார்பிலும் 19.06.2015 தேதியில் செங்கல்பட்டு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. நிர்வாகம் மனுதாரர் மீது உண்மைக்கு புறம்பான குற்றங்களை சுமத்தி 11.11.2016 தேதியிட்ட உத்தரவின் மூலம் தற்காலிக பணி நீக்கம் செய்தது. அதை ஆட்சேபித்து மனுதாரர் 11.11.2016 தேதியிட்ட

கடிதத்தை அளித்தார். அதன் பின்னர் 19.12.2016 அன்று குற்றச்சாட்டு அறிக்கை அளித்தது. அதில் 13.10.2016 அன்றைய பணியின் போது 8 dia & 16 dia tool உடைத்துவிட்டதாக மனுதாரர் மீது அபாண்டமாய் பொய் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. மேலும் 21.10.2016 அன்று பணியிடத்தைவிட்டு சென்றதாகவும், அதை மனுதாரருடைய டீம் லீடர் கேட்டதற்கு உரிய பதிலளிக்கவில்லை எனவும், மேலதிகாரியின் சட்டபூர்வ உத்தரவிற்கு கீழ்படியாமை, குடிபோதையில் இருப்பது, வேலையில் கவனக்குறைவு தொழிற்கூடத்தை சுத்தமாக பராமரிக்காதது, நிறுவனத்தின் சொத்தை சேதப்படுத்தியது, வேண்டுமென்றே வேலைகளை மெதுவாய் செய்தது என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. 21.12.2016 நாளிட்ட மேலும் ஒரு பொய் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. அதில் 13.10.2016,14.102016,15.10.2016 ஆகிய தேதிகளின் லாக்புக் எழுதவில்லை என்றும் எனவே மேல் அதிகாரியின் உத்தரவுக்கு கீழ்படியாமை, நிர்வாகத்திற்கு எதிராக அறிக்கை விடுவது என மேலும் இரண்டு

பொய்க்குற்றச்சாட்டுகள் மனுதாரர் மீது சுமத்தப்பட்டது. மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுகளை மறுத்து 30.12.2016, 10.01.2017 ஆகிய தேதிகளில் விளக்க கடிதங்களை அளித்தார். அதனை ஏற்காத நிர்வாகம் 07.01.2017 மற்றும் 17.01.2017 தேதிகளில் விசாரணைக்கு நிர்வாகம் உத்தரவிட்டது. 19.12.2016 தேதியிட்ட குற்றச்சாட்டிற்கும், 21.12.2016 தேதியிட்ட குற்றச்சாட்டிற்கும் தனித்தனியே விசாரணை நடத்தப்பட்டது. இவ்விரு விசாரணைக்கும் திரு.A.K.கலைமணி என்பவர் விசாரணை அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டார்.

உள்துறை விசாரணை அதிகாரி இயற்கை நீதிக்கு முரணாக நடந்துகொண்டார். விசாரணை அதிகாரி நிர்வாகத்திற்கு ஆதரவாய் ஒருதலைபட்சமாய் செயல்படுவதை நிர்வாகத்திடம் புகார் அளித்தார். விசாரணையில் நிர்வாகத்தரப்பு சாட்சிகள் மூலம் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. நிர்வாகத்தரப்பின் ஆவணங்கள் முழுமையாக மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. சாட்சிகளை மனுதாரர் குறுக்கு

விசாரணை செய்த போது மனுதாரர் எழுப்பிய பல முக்கிய வினாக்களை பதிவு செய்ய மறுத்துவிட்டார். விசாரணை அதிகாரி நிர்வாகத்தரப்பின் மற்றொரு பிரதிநிதி போல நடுநிலை தவறி செயல்பட்டார். விசாரணையானது விசாரணை நடைமுறைகளுக்கு விரோதமாய் நடத்தப்பட்டது.

இரண்டு விசாரணைகள் முடிவில் விசாரணை அதிகாரி 29.04.2017 மற்றும் 23.08.2017 ஆகிய தேதிகளில் அறிக்கையாக அளித்தார். இரண்டிற்கும் மனுதாரர் தனது விளக்கத்தினை அளித்தார். விசாரணை அதிகாரியின் இறுதி அறிக்கையை ஏற்றுக்கொண்ட நிர்வாகம் மனுதாரரை ஏன் பணி நீக்கம் செய்யக்கூடாது என விளக்கம் கோரி 20.10.20177 தேதியிட்ட இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு வழங்கியது. அதற்கான விளக்கத்தை மனுதாரர் 29.11.2017 தேதியில் விளக்கம் அளித்தார். மனுதாரரின் பதிலை ஏற்க மறுத்து எதிர்மனுதாரர் நிர்வாகம் 13.04.2018 தேதியிட்ட உத்தரவின் மூலம் மனுதாரரை பணியிலிருந்து நீக்கி

உத்தரவிட்டது. இதை எதிர்த்து தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்) திருபெரும்பத்தூர் முன்பாக தாக்கல் செய்த ஏற்பளிப்பு மனு அனுமதிக்கப்பட்டது. வேலை நீக்கத்திற்கு பிறகு மனுதாரர் வேறு எங்கும் பணிபுரியாததால் மனுதாரர் குடும்பமும் மிகுந்த சிரமத்தை சந்தித்து வருகிறது. மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக தெரிவித்துள்ள விசாரணை அதிகாரியின் இறுதியறிக்கை ஒரு perverse அறிக்கையாகும். மனுதாரர் சுமார் 5 ஆண்டுகள் எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் பணியாற்றியுள்ளார். அவரின் பணிக்காலம் அப்பழுக்கற்றது. எனவே மனுதாரரின் கடந்தகால பணியை கணக்கில் கொள்ளாமல் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழங்கியுள்ள தண்டனை கொடுந்தண்டனையாகும். மனுதாரர் பணிநீக்க உத்தரவை ரத்து செய்ய கோரி 04.04.2019 தேதியில் தொழிலாளர் இணை ஆணையர் முன்பாக மனு தாக்கல் செய்யப்பட்டு 45 நாட்கள் கடந்துவிட்ட நிலையில் இம்மனு நேரடியாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மனுதாரரை பணியிலிருந்து நீக்கிய எதிர்மனுதாரரின் 13.04.2018 நாளிட்ட உத்தரவு இயற்கை நீதிக்கும், மாதிரி நிலையாணைகளுக்கும், தொழிற்தகராறு சட்டத்திற்கும் விரோதமானது என்பதால், அந்த உத்தரவை ரத்து செய்து, மனுதாரருக்கு மீண்டும் பணியும், பின்சம்பளமும் இதர பண மற்றும் பணி பயன்களும், பணித்தொடர்ச்சியும், வழங்கிட எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம்**

மனுதாரரின் கோரிக்கை மனுவில் உள்ள சங்கதிகளை எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டவை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைபெற்றவராவார்.

எதிர்மனுதாரர் Tyre mould போன்ற வாகன உதிரிபாகங்களை தயாரிக்கும் சீனா நிறுவனத்தின் துணை நிறுவனமாக செயல்படுகிறார். மனுதாரர் 66 கோடிக்கு மேல் முதலீடு செய்து செப்டம்பர் 2012ல் தனது

தொழிலை தொடங்கியுள்ளார். எதிர்மனுதாரர் தொழிற்சாலை செங்கல்பட்டு தாலுகாவிலுள்ள மஹிந்திரா வேர்ல்ட் சிட்டியில் அமைந்துள்ளது. மனுதாரர் மேலே குறிப்பிட்ட முகவரியில் அமைந்துள்ள எதிர்மனுதாரரின் தொழிற்சாலையில் பணிபுரிந்தார். மேலும் இது வாகன உதிரிபாகங்களை உற்பத்தி செய்கிறது. வரையறுக்கப்பட்ட வணிக ஆர்டர்கள் காரணமாக தரத்தை அடைவதற்கும் அதன் வணிகத்தின் சரியான நேரத்தில் பொருள் கழிவுகளை குறைப்பதற்கும், செலவு குறைந்த உற்பத்தி செயல்பாட்டிற்கான உற்பத்தி விதிமுறைகள் மற்றும் SOPஐ கண்டிப்பாக பின்பற்றுவதை எதிர்மனுதாரர் எப்போதும் கட்டாயப்படுத்தினார்.

மனுதாரர் எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் ஆப்ரேட்டராக உற்பத்தி பிரிவில் வேலை செய்து வந்தார். 13.10.2016 அன்று இரவு பணியின் போது மனுதாரர் பணியில் இருந்த வேளையில் அவர் தனது வேலையில் கவனம் செலுத்தவில்லை என்று மனுதாரருக்கு எதிராக புகார் அளிக்கப்பட்டது. மனுதாரர் இயந்திரத்தை முறையாக பரிசோதிக்காமல் கருவியை ஏற்றி

இயந்திரத்தை கவனக்குறைவாக இயக்கி 10 விட்டமுள்ள விலையுயர்ந்த கருவியை உடைத்துள்ளார். அவரது குழு தலைவரால் பலமுறை வாய்மொழியாக எச்சரிக்கை விடுவிக்கப்பட்ட போதிலும், அவர் தனது மனப்பான்மை மாற்றிக்கொள்ளவில்லை. மனுதாரர் வேலையை பொறுப்பற்ற முறையிலும் அலட்சியமாகவும் செயல்பட்டு விலையுயர்ந்த கருவிகளை சேதப்படுத்தியுள்ளார். இச்செயலை 14.10.2016, 20.0.2016, 21.10.2016 ஆகிய தேதிகளில் நிகழ்ந்துள்ளது.

21.10.2016 அன்று காலை சுமார் 5.30 மணி முதல் 5.55 மணிக்குள் இயந்திரம் இயங்கிக்கொண்டிருந்தபோது, மனுதாரர் தனது பணியிடத்திலிருந்து வெளியே சென்றதால் 16 அங்குல விட்டம் கொண்ட கருவி உடைந்து இயந்திரம் கவனிக்கப்படாமல் இயங்கிக்கொண்டிருந்தது. மனுதாரரின் குழு தலைவர் சேதமடைந்த கருவியை ஆய்வு செய்த பின்னர் இயந்திரத்தை நிறுத்தும்படி மனுதாரருக்கு அறிவுறுத்தினார். பின்னர் கருவி இயந்திரத்திலிருந்து அகற்றப்பட்டு மீண்டும் சரிசெய்யப்பட்டது. இதனால் உற்பத்தி தாமதம் ஏற்பட்டு

பெரிதும் பாதிக்கப்பட்டது. அதை மனுதாரரிடம் விசாரித்த போது சரியாக பதில் அளிக்கவில்லை. மனுதார் தனது மேற்பார்வையாளர்களிடம் மரியாதையின்றி தவறாக நடந்து கொண்டு வாக்குவாதம் செய்தார். இந்த செயலால் நிர்வாகம் தொடர்ச்சியான இழப்பு மற்றும் சேதத்தை சந்திக்க நேரிட்டது. 11.11.2016 அன்று விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர் இடை நீக்கம் செய்யப்பட்டு குற்றச்சாட்டு குறிப்பாணை 19.12.2016 தேதியில் அளித்து விளக்கத்தை 5 நாட்களுக்குள் அளிக்குமாறு குறிப்பிட்டிருந்தார். மனுதாரர் 30.12.2016 தேதியில் அளித்துள்ள விளக்கம் திருப்திகரமாக இல்லை என்பதால் உள்துறை விசாரணை நடத்த முடிவு செய்து விசாரணை அதிகாரியை நியமித்து விசாரணை தொடங்கப்பட்டது. நிர்வாக பிரதிநிதியாக திரு.தமிழ்செல்வன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். விசாரணையில் நிர்வாகத்தரப்பில் 9 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் நகல்களை மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் அந்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். நி.சா.1 பரத்குமார் என்பவரை மனுதாரர் பல

நாட்கள் குறுக்கு விசாரணை செய்து முடித்துள்ளார். மனுதாரரையும் நிர்வாகத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. இறுதியாக விசாரணை அதிகாரி 29.04.2017 தேதியில் முடிவறிக்கையை வழங்கியுள்ளார்.

மனுதாரருக்கு 21.12.2016 தேதியில் மற்றொரு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு அதற்கு 5 நாட்களுக்குள் விளக்கம் அளிக்குமாறு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கு மனுதாரர் 10.01.2017 தேதியில் விளக்கம் அளித்தார். மனுதாரரின் விளக்கம் திருப்திகரமாக இல்லாததால் எதிர்மனுதாரர் தனியாக 17.01.2017 தேதியில் உள்துறை விசாரணை நடத்த முடிவு செய்து 10.05.2017 தேதியில் விசாரணை துவங்கப்பட்டது. விசாரணையில் பரத்குமார் நி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. மனுதாரரையும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. விசாரணை பல நாட்கள் நடைபெற்ற விசாரணைக்கு பிறகு விசாரணை அதிகாரி தனது 23.08.2017 தேதியில் முடிவறிக்கையை வழங்கினார்.

மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ள இரண்டு குற்றச்சாட்டு

குறிப்பாணையிலும் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் பிரிவுகள் 16(a),16(j),16(k),16(l),16(q),16(s) ஆகியவற்றுடன் ஒத்துப்போகின்றன என நிர்வாக பிரதிநிதி குற்றம் சாட்டியுள்ளார். முடிவறிக்கையின் அடிப்படையில் மனுதாரருக்கு 20.10.2017 தேதியில் இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பில் ஏன் பணி நீக்கம் செய்யக்கசுடாது என கேட்டு அனுப்பப்பட்டது. அதற்கு மனுதாரர் அளித்த விளக்கம் நிர்வாகத்திற்கு திருப்தி ஏற்படாத காரணத்தினால் பணியிடை நீக்கம் செய்த 11.11.2016 தேதியிலிருந்தே பணி நீக்கம் செய்யப்பட்டது. இரண்டு உள்துறை விசாரணைகளும் மனுதாரருக்கு எதிராகவும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு முரணாகவும், நெறிகோணியதாகவும் நடைபெற்றது. மனுதாரர் தன் தரப்பை நிரூபிப்பதற்காக சாட்சியளிக்க ஒரு வாய்ப்பு அளிக்க கோரியுள்ளார். இரண்டு விசாரணைகளும் நெறிகோணியதாக உள்ளது என்று மனுதாரர் குற்றம் சாட்டினார்.

மனுதாரர் தொழிலாளர் உதவி ஆணையர் -1 முன்பாக தாக்கல் செய்யப்பட்ட I.D.No.AA/55/2017, AA/989/2016 & AA/1060/2016 மற்றும்

I.D.No.AA/874/2017 ஆகிய வழக்குகளில் சம்மந்தப்பட்ட ஒரு தொழிலாளி ஆவார். தொ.த.ச.பிரிவு 33(2)(b)ன்படி மனுதாரருக்கு ஒரு மாத ஊதியமாக ரூ.11806/- யை 13.04.2018 தேதியில் வரைவோலை மூலமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொ.த.விதி 64, துணை விதி(2)ன்படி மனுதாரருக்கு பதிவு தபால் மூலம் ஒரு நகல் முறையாக அனுப்பப்பட்ட பின்னர் படிவம் Tல் அப்ரூவல் மனு ஸ்ரீபெரும்புதூர் ACL-I ல் ஒரே நேரத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர் அந்த விண்ணப்பத்தை பெற்றவுடன் எதிர்மனுதாரரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையை மறுக்கவோ அல்லது அதற்கு எதிராக எந்த ஆட்சேபனையும் எழுப்பவோ இல்லை. எனவே எதிர்மனுதாரரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையையும், உத்தரவையும் ACL-I முறையாக அங்கீகரித்தது. ஆகவே வழக்கு 13.04.2018 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பிறகு மனுதாரர் தொ.த.சா.பிரிவு 2Aன்கீழ் துணை தொழிலாளர் ஆணையர் முன்பு தாக்கல் செய்யப்பட்டதில் சமரசம் ஏற்படாததால் சமரச முறிவறிக்கை 13.08.2019 தேதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கவில்லை. எதிர்மனுதாரர் தரப்பு நி.சா.1 குறுக்கு விசாரணையின் போது தொ.சா.ஆ.1 முதல் தொ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/நிர்வாகத்தரப்பில் நி.சா.1 விசாரிக்கப்பட்டு நி.சா.ஆ.1 முதல் நி.சா.ஆ.39 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளின் பேரில் நடத்தப்பட்ட உள்துறை விசாரணை நடவடிக்கைகள் முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதா? என்பதே தற்போதைய முதல்நிலை விசாரணைக்கான பிரச்சனையாகும்.**

6. இருதரப்பும் கேட்கப்பட்டது. 16.10.2016 தேதியில் பரத்குமார் அளித்த புகாரின் (நி.சா.ஆ.2) அடிப்படையில் நி.சா.ஆ.5 குற்றச்சாட்டு குறிப்பாணையை மனுதாரருக்கு அனுப்பி விளக்கம் கோரப்பட்டுள்ளது. அதில் மனுதாரர் 13.10.2016 அன்று இரவு பணியில் Engraving(B2) Teamல்

பணிபுரிந்த பொழுது நீங்கள் பணிபுரிந்த இயந்திரத்தை பரிசோதிக்காமல் தவறுதலாக இயக்கியதால் 10dia tool உடைந்துவிட்டது. இதுபோன்றே 14.10.2016, 20.10.2016 மற்றும் 21.10.2016 ஆகிய தேதிகளில் உற்பத்தியில் ஈடுபட்டபோது பரிசோதிக்காமல் இயக்கியதால் 8dia & 16dia tool உடைத்துள்ளதாகவும், உடைத்ததை மாற்றுவதால் காலவிரையம் ஏற்படுவதாகவும், உற்பத்தி தாமதப்படுவதால் வாடிக்கையாளர்களுக்கு குறித்த நேரத்தில் டெலிவரி கொடுக்க இயலாமல் போகிறது என்றும், பலமுறை டீம் லீடர் மற்றும் இன்ஜினியர் வாய்மொழி மூலம் அறிவுரையும். எச்சரிக்கையும் கொடுக்கப்பட்டும் மீண்டும் இச்செயல்களில் ஈடுபடுவது கடுமையான ஒழுங்கீன செயல்களாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டிற்கு மனுதாரர் அளித்த நி.சா.ஆ.9 விளக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்மனுதாரர் நிர்வாகம் உள்துறை விசாரணை நடத்த முடிவு செய்து விசாரணை அதிகாரியை நியமிக்கப்பட்டது.

7) 20.01.2017 தேதியில் உள்துறை விசாரணை ஆரம்பிக்கப்பட்டது அன்றைய தினம் விசாரணை அதிகாரி, நிர்வாகபிரதிநிதி ஆகியோர் ஆஜரானார்கள். குற்றம் சாட்டப்பட்டவர் ஆஜராகவில்லை. விசரணை அதிகாரி விசாரணை நடைமுறைகள் பற்றி குறிப்பிட்டிருந்தார். நிர்வாக தரப்பில் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 04.02.2017 தேதியில் நடைபெற்ற விசாரணையில் இருதரப்பினரும் ஆஜரானார்கள். அன்றைய தினம் விசாரணை அதிகாரி நிர்வாக பிரதிநிதியிடமும், குற்றம் சாட்டப்பட்டவரிடமும் விசாரணை நடத்தினார். 23.02.2017, 02.03.2017, 09.03.2017, 23.03.2017ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட விசாரணையில் இரு தரப்பும் ஆஜராகி நிர்வாகதரப்பு சாட்சியை மனுதாரர் குறுக்கு விசாரணை செய்து முடித்துள்ளார். விசாரணை நடவடிக்கை நகல் குற்றம் சாட்டப்பட்டவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. 06.04.2013 தேதியில் நடைபெற்ற விசாரணையில் குற்றம் சாட்டப்பட்ட ஊழியர் தனது எழுத்து மூலத்தை அளித்துள்ளார். 17.04.2017 தேதியில் நடைபெற்ற விசாரணையில்

மனுதாரரை நிர்வாகதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நி.சா.ஆ.11ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பினரின் சம்மதத்துடன் விசாரணை முடித்துக்கொண்டு விசாரணை அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவரின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக கூறி 29.04.2017 தேதியில் விசாரணை முடிவறிக்கை (நி.சா.ஆ.12) அளித்துள்ளார்.

8. பரத்குமார் என்பவர் அளித்த மற்றொரு புகாரின் (நி.சா.ஆ.3) பேரில் மனுதாரருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை நி.சா.ஆ.6 வழங்கப்பட்டுள்ளது. அதில் மனுதாரர் production engravingல் பணிபுரிந்த போது 13.10.2016, 14.10.2016 மற்றும் 15.10.2016 ஆகிய தேதிகளில் இயந்திரம் குறித்தும், உற்பத்தி குறித்தும் மற்றும் ஏனைய தகவல்கள் குறித்தும் logbookல் எழுதவில்லை. இது குறித்து டீம் லீடர் கேட்டதற்கு எழுதியதாகவும், அதனை யாரோ கிழித்தெரிந்துவிட்டனர் என்று நோட்டில் எழுதியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அதனை டீம் லீடர் பரிசோதித்து பார்த்த பொழுது

அவ்வாறு யாரும் கிழிக்கவில்லை. மனுதாரர் எவ்வித சரியான பதிலும் கூறவில்லை இவ்வித செயல் ஒழுங்கீன நடவடிக்கையாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டிற்கு குற்றம் சாட்டப்பட்டவர் அளித்த விளக்க கடித நி.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த விளக்க கடிதம் திருப்தி அளிக்காத காரணத்தினால் எதிர்மனுதாரர் நிர்வாகம் உள்துறை விசாரணை செய்ய முடிவு செய்து விசாரணை அதிகாரியை நியமித்து விசாரணையை 10.05.2017 தேதியில் விசாரணை துவங்கப்பட்டது. விசாரணை அதிகாரி விசாரணை நடைமுறைகளை பற்றி தெரிவித்துள்ளார். விசாரணைக்கு நிர்வாகத்தரப்பில் நிர்வாகபிரதிநிதி தமிழ்செல்வன் ஆஜராகியுள்ளார். விசாரணை குறித்த கடிதம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு நிர்வாகத்தரப்பில் அனுப்பப்பட்டும். அன்றைய தின விசாரணையில் பங்கேற்கவில்லை. அன்றைய தினம் நிர்வாகத்தரப்பில் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 18.05.2017 தேதியிட்ட விசாரணையில் இருதரப்பினரும் ஆஜரானார்கள். விசாரணை அதிகாரி

குற்றம் சாட்டப்பட்டவரிடமும், நிர்வாக தரப்பு சாட்சியாக பரத்குமார் என்பவரையும் விசாரணை செய்துள்ளார். விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல் மற்றும் ஆவணங்களின் நகல் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்டுள்ளது. 05.06.2017 தேதியில் நடைபெற்ற விசாரணையில் குற்றம் சாட்டப்பட்ட ஊழியர் ஆஜராகவில்லை அடுத்த கட்ட விசாரணை 14.06.2017 தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் இருதரப்பினரும் ஆஜரானார்கள் குற்றம் சாட்டப்பட்டவர் நிர்வாகபிரதிநிதியிடமும், நி.சா1மும் குறுக்கு விசாரணை செய்துள்ளார். 20.06.2017 தேதியில் நடைபெற்ற விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர் ஆஜராகவில்லை. 29.06.2017, 06.07.2017 ஆகிய தேதிகளில் குற்றம் சாட்டப்பட்டவர் சக தொழிலாளியின்றி ஆஜரானார். அவர் நி.சா.1யை குறுக்கு விசாரணை செய்து முடித்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டவருக்கு இறுதி வாக்கு மூலத்தை பதிவு செய்ய அவகாசம் அளித்து 19.07.2017 தேதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் குற்றம்

சாட்டப்பட்டவர் ஆஜராகவில்லை. 26.07.2017 தேதியில் குற்றம் சாட்டப்பட்டவர் ஆஜராகி வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டவரை நிர்வாகதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 29.07.2017 தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் குற்றம் சாட்டப்பட்டவரை குறுக்கு விசாரணை செய்துள்ளார். மேலும் இருதரப்பினரின் சம்மதத்துடன் விசாரணை அதிகாரி விசாரணையை முடித்துக்கொண்டுள்ளார். விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நி.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவரின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவறிக்கை (நி.சா.ஆ.14) வழங்கியுள்ளார்.

9. குற்றம் சாட்டப்பட்டவர் தொழிலாளி மீது பரத்குமார் என்பவர் அளித்த புகார்களின் அடிப்படையில் குற்றங்சாட்டி இரண்டு குற்றச்சாட்டு குறிப்பாணைகளின் பேரில் உள்துறை விசாரணை செய்யப்பட்டு விசாரணை அதிகாரி அளித்த முடிவறிக்கைகளின் அடிப்படையில் குற்றம்

சாட்டப்பட்டவருக்கு இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு (நி.சா.ஆ.17) அனுப்பி அதற்கு அவர் அளித்த விளக்கம்(நி.சா.ஆ.18) திருப்தியில்லாததால் குற்றம் சாட்டப்பட்டவரை பணி நீக்கம் (நி.சா.ஆ.19) செய்யப்பட்டுள்ளது.. நி.சா.20 மூலமாக மனுதாரருக்கு எதிர்மனுதாரர் ஒரு மாத சம்பளமாக ரூ.11896/- மற்றும் முழு மற்றும் இறுதி தொகையையும் காசோலையாக அனுப்பப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மேலும் மனுதாரருக்கு பணியிடை நீக்கம் செய்த காலத்திற்கான பிழைப்பூதியம் (நி.சா.ஆ.26) வழங்கப்பட்டுள்ளது.

10. உள்துறை விசாரணை நடவடிக்கை குறிப்புகளையும், மனுதாரர் தரப்பு கடிதங்கள், எதிர்மனுதாரர் தரப்பு கடிதங்கள், ஆவணங்களை பரிசீலிக்கையில் உள்துறை விசாரணை துவங்கும் போதே விசாரணை அதிகாரி விசாரணை நடைமுறைகளை பற்றி விளக்கமாக எடுத்துரைத்துள்ளார். குற்றம் சாட்டப்பட்ட மனுதாரருக்கு விசாரணை அதிகாரி போதிய கால அவகாசமும், வாய்ப்பும் வழங்கியுள்ளார். சக

ஊழியரை உடன் வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர் உள்துறை விசாரணையில் பங்கேற்க சக ஊழியராக நிறுவனத்தில் பணியாற்றும் எந்த சக ஊழியரையும் அழைத்து வரவில்லை. குற்றம் சாட்டப்பட்ட தொழிலாளி நிர்வாகத்தரப்பு சாட்சிகளை பல நாட்கள் குறுக்கு விசாரணை செய்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டவரையும் நிர்வாகத்தரப்பு குறுக்கு விசாரணை செய்துள்ளது. சில நாட்கள் மட்டும் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்துள்ளார். ஒவ்வொரு நாள் விசாரணையில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களையும், விசாரணை குறிப்புகளையும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்டுள்ளது. விசாரணை அதிகாரி விசாரணை நடைமுறைபடியே விசாரணையை நடத்தியுள்ளார். எனவே உள்துறை விசாரணை இயற்கை நீதிக்கு உட்பட்டு நடந்ததாக முடிவு செய்யப்படுகிறது.

11. அதே சமயத்தில், மனுதாரர் மீதான ஒழுங்கீன செயல் தண்டனைக்கு உரியதா? இல்லையா? விசாரணை அதிகாரியின் முடிவு

நெறிகோணியதாக (perverse) உள்ளதா, மனுதாரருக்கு வழங்கப்பட பணி நீக்க தண்டனை மிகையானதா, மனுதாரர், நிர்வாகம் சொல்வது போன்று குற்ற செய்கையில் ஈடுபட்டாரா போன்ற சங்கதிகளை சட்டப்பிரிவு 11(A) விசாரணையில் விசாரித்து முடிவு எடுக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

முடிவாக மனுதாரர் மீது நடத்தப்பட்ட உள்துறை விசாரணை நடவடிக்கைகள் முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதாகவே இந்த முதல்நிலை விசாரணைக்கு தீர்வு காணப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2026 ஆம் ஆண்டு மே 22 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S SUJATHA
Digitally signed by S SUJATHA
Date: 2026.05.22 18:54:32 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,

தொழிலாளர் நீதிமன்றம்,

காஞ்சீபுரம்.

**<u>மனுதாரர்/தொழிலாளி தரப்பு சாட்சிகள்</u>:** இல்லை.

**<u>மனுதாரார் / தொழிலாளி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| தொ.சா.ஆ.1 | 11.11.2016 | பணியிடை நீக்கத்திற்கு மனுதாரரின் பதில் நகல். |
| தொ.சா.ஆ.2 | 27.12.2016 | மனுதாரர் கால அவகாசம் கோரியதற்கு நிர்வாகம் கால அவகாசம் தரமுடியாது என அளித்த பதில் கடித நகல். |
| தொ.சா.ஆ.3 | 04.02.2017 | நிர்வாகத்தின் Tool and measurement scrap sheet நகல். |
| தொ.சா.ஆ.4 | 03.02.2017 | நிர்வாகத்தின் கால அவகாசம் தர முடியாது என அளித்த பதில் கடித நகல். |
| தொ.சா.ஆ.5 | 03.02.2017 | விசாரணையை தொழிற்சாலைக்குள் நடத்த கோரிய கடிதம் நகல். |
| தொ.சா.ஆ.6 | 27.02.2017 | நிர்வாகத்தின் கடித நகல். |
| தொ.சா.ஆ.7 | 04.02.2017 | விசாரணை அதிகாரிக்கு மனுதாரர் அனுப்பிய கடிதம் நகல் |
| தொ.சா.ஆ.8 | 26.07.2017 | மனுதாரர் உள்துறை விசாரணையில் தாக்கல் செய்த ஆவணங்கள் நகல் |

**<u>எதிர்மனுதாரர் /நிர்வாக தரப்பு சாட்சி</u> :** சதீஷ்பாபு

**<u>எதிர்மனுதாரர் /நிர்வாக தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| நி.சா.ஆ1 | 03.02.2026 | எதிர்மனுதாரர் நிர்வாகம் நி.சா.1க்கு அளித்த அங்கீகார கடித அசல். |
| நி.சா.ஆ.2 | 16.10.2016 | மனுதாரருக்கு எதிராக பரத்குமார் என்பவர் கொடுத்த புகார் நகல். |

| | | |
|---|---|---|
| நி.சா.ஆ.3 | 21.10.2016 | மனுதாரருக்கு எதிராக பரத்குமார் என்பவர் கொடுத்த புகார் நகல்.. |
| நி.சா.ஆ.4 | 11.11.2016 | பணியிடை நீக்க ஆணை நகல். |
| நி.சா.ஆ.5 | 19.12.2016 | குற்றச்சாட்டு குறிப்பாணை நகல். |
| நி.சா.ஆ.6 | 21.12.2016 | குற்றச்சாட்டு குறிப்பாணை நகல் |
| நி.சா.ஆ.7 | 30.12.2016 | மனுதாரரர் அளித்த விளக்க கடித நகல். |
| நி.சா.ஆ.8 | 10.01.2017 | மனுதாரரர் அளித்த விளக்க கடித நகல். |
| நி.சா.ஆ.9 | 07.01.2017 | துறை விசாரணை நியமன ஆணை நகல |
| நி.சா.ஆ.10 | 17.06.2017 | துறை விசாரணை நியமன ஆணை நகல். |
| நி.சா.ஆ.11 | 20.01.2017-17.04.2017 | உள்துறைவிசாரணையின் விசாரணை நடவடிக்கை குறிப்புகள். |
| நி.சா.ஆ.12 | 29.04.2017 | விசாரணை அதிகாரியின் முடிவறிக்கை நகல். |
| நி.சா.ஆ.13 | 10.05.2017-29.07.2017 | உள்துறை விசாரணை நடவடிக்கை நகல். |
| நி.சா.ஆ.14 | 23.08.2017 | விசாரணை அதிகாரியின் முடிவறிக்கை நகல். |
| நி.சா.ஆ.15 | 18.08.2017 | ஒழுக்கக்கட்டுப்பாட்டு அதிகாரியின் விவரமான ஆணை |
| நி.சா.ஆ.16 | 23.09.2017 | ஒழுக்கக்கட்டுப்பாட்டு அதிகாரியின் விவரமான ஆணை |
| நி.சா.ஆ.17 | 20.10.2017 | இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு நகல். |
| நி.சா.ஆ.18 | 27.11.2017 | மனுதாரரர் அளித்த விளக்க கடித நகல். |
| நி.சா.ஆ.19 | 13.04.2018 | பணி நீக்க உத்தரவு நகல். |

| | | |
|---|---|---|
| நி.சா.ஆ.20 | 13.04.2018 | ஒரு மாதத்திற்கான சம்பள ரூ.9346/-க்கான வரைவோலை மற்றும் முழு மற்றும் இறுதி செட்டில்மெண்ட் தொகைக்கான வரைவோலை நகல். |
| நி.சா.ஆ.21 | 13.04.2018 | எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அப்ரூவல் மனு (Form T ) நகல். |
| நி.சா.ஆ.22 | 10.08.2018 | அப்ரூவல் மனுவிற்கான உத்தரவு நகல். |
| நி.சா.ஆ.23 | 03.04.2019 | துணை தொழிலாளர் ஆணையர் முன்பாக மனுதாரர் தாக்கல் செய்த 2A மனுவின் நகல். |
| நி.சா.ஆ.24 | 27.05.2019 | துணை தொழிலாளர் ஆணையர் முன்பாக எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பதிலுரை நகல். |
| நி.சா.ஆ.25 | 13.08.2019 | துணை தொழிலாளர் ஆணையர் அளித்த முறிவறிக்கை நகல். |
| நி.சா.ஆ.26 | நவம்பர் 2016 முதல் ஏப்ரல் 2018 | பிழைப்பு ஊதிய தொகை வழங்கியதற்கான கடிதம் மற்றும் வரைவோலை நகல். (எண்ணிக்கை 18) |
| நி.சா.ஆ.27 | 27.12.2016 | கால அவகாச கடித நகல். |
| நி.சா.ஆ.28 | 07.01.2017 | கால அவகாச கடித நகல். |
| நி.சா.ஆ.29 | 10.01.2017 | விசாரணை அதிகாரி நியமன ஆணை நகல். |
| நி.சா.ஆ.30 | 12.01.2017 | நிர்வாகத்தரப்பு பிரதிநிதி நியமன கடித நகல். |
| நி.சா.ஆ.31 | 12.01.2017 | உள்துறை விசாரணை, விசாரணை அதிகாரி மற்றும் நிர்வாகப்பிரதிநிதி நியமனம் குறித்த விபரத்தை மனுதாரருக்கு தெரிவிக்க எதிர்மனுதாரர் அனுப்பிய கடித நகல். |
| நி.சா.ஆ.32 | 23.01.2017 | உள்விசாரணை தேதி அறிக்கை நகல். |

| | | |
|---|---|---|
| நி.சா.ஆ.33 | 27.02.2017 | மனுதாரரின் கடிதத்திற்கு நிர்வாகத்தின் விளக்கம் நகல். |
| நி.சா.ஆ.34 | 05.05.2017 | உள்விசாரணை தேதி அறிக்கை நகல். |
| நி.சா.ஆ35 | 10.05.2017 | உள்விசாரணை தேதி அறிக்கை நகல். |
| நி.சா.ஆ.36 | 06.06.2017 | உள்விசாரணை தேதி அறிக்கை நகல். |
| நி.சா.ஆ.37 | 20.06.2017 | உள்விசாரணை தேதி அறிக்கை நகல். |
| நி.சா.ஆ38 | 20.07.2017 | உள்விசாரணை தேதி அறிக்கை நகல். |
| நி.சா.ஆ39 | 16.11.2017 | கால அவகாச கடித நகல். |

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.05.22 18:54:22 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,

தொழிலாளர் நீதிமன்றம்,

காஞ்சீபுரம்.